சுருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – 2022-2024 ஆம் ஆண்டிற்கான பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை**

**அரசாணை (1டி) எண்.**64

**நாள் 29.02.2024**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**சோபகிருது வருடம், மாசி 17**

**படிக்கப்பட்டவை :-**

1. ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.449/C7/ஒபக/பமேகு, நாள் 16.03.2022.
2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், கடித ந.க.எண்.1059/SMC/MS/2023, நாள் 12.02.2024.

********

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைமுறைகளானது கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல், ஜுலை மாதங்களில் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் முறையே 2024 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜுலை மாதங்களில் முடிய உள்ள நிலையில், உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஆகஸ்ட் 2024 வரை நீட்டித்து ஆணை பிறப்பிக்குமாறு உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்தெரிவிக்கப்பட்ட நிலையில், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் அவர்களின் கருத்துருவினை ஏற்று, இதனை சிறப்பு நேர்வாகக் கருதி, 2024-2025 ஆம் கல்வியாண்டில் புதியதாக சேரும் மாணவர்களின் பெற்றோர்களையும் உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக் குழுவினை அமைக்கும் பொருட்டு, தமிழ்நாடு இலவச கட்டாய கல்வி உரிமை விதிகள், 2011 இல் விதி 14 (1)ஐ தளர்வு செய்து, 2022-2024 ஆண்டிற்கான தொடக்க,

நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலத்தை கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

| பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்ட நாள் (2022-2024) | அரசுப் பள்ளிகளின் வகைப்பாடு | புதிய உறுப்பினர்கள் மறு கட்டமைப்பிற்கான முன்மொழிவு கால அட்டவணை (2024-2026) | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பதவி நீட்டிப்பு செய்ய வழங்கும் காலம் |
|---|---|---|---|
| 23.04.2022 | நடுநிலைப் பள்ளிகள் | 2024 ஜுலை 3-வது வாரம் | 24.04.2024 முதல் 20.07.2024 வரை |
| 30.04.2022 | 50% தொடக்கப் பள்ளிகள் | 2024 ஜுலை 4-வது வாரம் | 01.05.2024 முதல் 27.07.2024 வரை |
| 07.05.2022 | மீதமுள்ள 50% தொடக்கப் பள்ளிகள் | 2024 ஆகஸ்ட் முதல் வாரம் | 08.05.2024 முதல் 10.08.2024 வரை |
| 09.07.2022 | உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | 2024 ஆகஸ்ட் 2-வது வாரம் | 10.07.2024 முதல் 17.08.2024 வரை |

4. மேலும், 2024 ஆம் ஆண்டு ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் 2024-2026 ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைமுறைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறு உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. குமரகுருபரன்**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை – 6.
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**